# இரப்பர் வளையல்; சில்க் ரிப்பன்!

என்னுடைய சின்னஞ்சிறு பிராயத்தில், ஒவ்வொரு மாதமும் ஓரிரு நாட்கள் ஒலித்த சொல். அவர் பெயர் காந்தி, ஒரு வட்ட வடிவமான கூடையைச் தலையில் சுமந்தபடி, வீதி வீதியாக விற்பனைச் செய்பவர். அரைஞான் தொடங்கி, அனைத்தும் கிடைக்கும். அந்தக் கணீர் குரல் இன்றும் என் காதுகளில் ஒலிக்கும். சிரித்த முகம். பெருபான்மையான வாடிக்கையாளர்கள் சிறுமிகளே. விடுமுறையின் போதோ, எப்போதாவதோ தாத்தா வீட்டுக்குச் செல்லும் போதும் அவரைக் காண்பதுண்டு. வீட்டினுள் இருந்தாலும் ஓடி வந்து பார்த்ததுண்டு. “தம்பி எப்ப வந்தது” என்பார். அவரை என் அத்தை வீட்டிலும் கண்டிருக்கிறேன். அசராமல், நடப்பார். அந்த காலத்தில் எல்லாம், டிரெயினில்(தொடர் வண்டி) இறங்கி, பெரும்பாலும், நடந்தோ மாட்டுவண்டியிலோ செல்ல வேண்டிய நிலைதான். என் தாத்தா, அத்தை வீடு யாவையும் அவ்வாறுதான். நான்கு கிலோ மீட்டர் நடந்தே ஆகவேண்டும். எங்களூரில், தொடர் வண்டி நிலையம் இருந்ததால், அவருக்கு அதிகம் சிரமம் இருந்திருக்காது. குரல் மட்டுமல்ல நினைவில், அவரது புன்னகையும் என் மனக்கண் முன்னே இன்றும் நிழலாடுகிறது.

அடுத்து ஒருவர் கமர்கட் விற்பவர். அவரே கொஞ்சம் உயரமானவர், அவரைவிட உயரமான ஒரு கழியை வைத்திருப்பார். அதன், நுனிப் பகுதியில், மூங்கிலோ ஈர்க்குச்சியோ கொண்டு, சுற்றிலும் அடுக்கி வைத்து, அதனுள்ளே, ஈர்க்குச்சியிலோ, சிறியதாய் செதுக்கிய மூங்கில் குச்சியிலோ நுனியில் கமர்கட்டைச் சொருகி அடுக்கி வைத்திருப்பார். உண்டிவில் போல், கொட்டாங்கச்சியில் ஏதோ செய்து வைத்து ஒரு வினோதமான் ஒலி எழுப்புவார். அதுவே அவரது வருகையைக் கட்டியம் கூறும். அவை மூடாமல் செருகி வைக்கப் பட்டுள்ளதால், அதில் தூசி இருக்கும் எனப் பெரும்பாலும் வாங்க அனுமதி கிடைத்ததில்லை. மாதத்தில் சிலநாட்கள் கூடுதலாக

அவரைப் பார்க்க முடியும். கிராமத்தில் எங்கள் தெருவில் எங்கள் வீடு மட்டுமே அன்று இருந்ததால், அவர் உள் நுழைந்து விற்ற நினைவில்லை. அவர் எழுப்பும் ஒலிதான் அவரைப் பார்க்கத் தூண்டும். ஆரம்ப நாட்களில் அலுவலகத்தில், ஊதுவத்தி விற்க வந்த தம்பி ஜெயக்குமார், பின்னாளில், சிப்ஸ், பிஸ்கட் முதலான விற்ற நிலையில், அதே கமர்கட், சிறிய பிலாஸ்டிக் பையில் விற்பதை வாங்கி உண்ணும் போது, சின்னஞ்சிறு பிராயத்தில் பார்த்த கமர்கட் வியாபாரியின் முகமும், அவர் எழுப்பிய வினோத ஒலியும் ஞாபகத்துக்கு வரும். திரு ஜெயக்குமாரை, நான் பணிநிறைவு காணும் வரை ஊதுவத்தி என்றுதான் அழைத்து வந்தேன் என்பது வேறு விஷயம்.

இன்றைக்கு, விற்பனையாளர்கள், பெரும்பாலும் கறிகாய், வெங்காயம் முதற்கொண்டு, விற்க வீதியில் வருகின்றனர். பணிநிறைவுக்குப் பின் அதனை அதிகம் கேட்கின்றேன். சின்னஞ்சிறு பிராயத்தில், கண்டு மகிழ்ந்து, மனதில் நிலைத்த ஓர் அன்னியோன்யம். இன்று இவர்களிடம் ஏற்படுவதில்லை. காரணம், குரலைப் பதிவு செய்து, ஒலி பெருக்கியால், அறிவிப்பு செய்கிறார்கள். இளநீர் முதலானவற்றையும் ஓர் இராகத்துடன், ஒலிக்கச் செய்தாலும் ஈர்ப்பு வருவதில்லை. அவர்தம் குரலால் நம்மை நெருங்காததால், மனத்தாலும் நம்மால் நெருங்க முடிவதில்லை. இதனிலும் ஒரு 13,14 வயது சிறுமி, சைக்கிளில், கூடையில் வைத்து வாரத்தில் ஓரிரு நாட்கள் கறிகாய் விற்க வருவாள். குரலிடுவாள். அவள் பள்ளியிலும் பயில்கிறாள் என்பதறிந்து, தவறாமல் அவளிடம் கறிகாய் எங்கள் இல்லத்தில் வாங்குவோம். அவள் குரலிட்டு வந்ததால், அறிந்து கொள்ள விழைந்து, பொருளும் வாங்க வைத்தது.

யாவும் இயந்திர மயமாகிவிட்ட நிலையில், “பழையன கழிதலும், புதியன புகுதலும் வழுவல கால வகையினானே” எனும் நன்னூல் சூத்திரத்தை ஈண்டும் கொள்ள வேண்டியதுதான். —0— 22-03-2021